பக்கங்கள் 19 + 06

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## இந்திய மீனவர்கள் 22 பேர் நேற்று கைது

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 22 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள் ளார்கள். அத்துடன் அவர்கள் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 27 ஞாயிற்றுக்கிழமை 10.03.2024 அதிர்வு 223

# மீண்டும் இன மோதலுக்கு அத்திவாரமிடும் பொலிஸ்

## வெடுக்குநாறிமலை அட்டூழியங்களை வன்மையாகக் கண்டிக்கின்றார் சுரேஷ்





**(எஸ்.நிதர்ஷன்)**

**பௌத்த பிக்குகளுடனும் இராணுவத் தினருடனும் சேர்ந்து மீண்டும் ஒரு மதப் பிரச்சினையின் ஊடாக இன மோதலுக்கான அத்திவாரத்தைப் பொலிஸார் இடுகின்றனர் என்று ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்ன ணியின் தலைவருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டினார்.**

வெடுக்குநாறிமலையில் மகா சிவ ராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்களைக் கைது செய்திருப்பதுடன், கோயிலுக்குள் சப்பாத்துக் கால்களுடன் சென்று அங்கு வழிபாட்டில் ஈடுபட்டிருந்த சிவ பக்தர்களின் உணர்வுகளை அவமதித்திருக்கும் பொலிஸாரின் செயற்பாடுகளைக் கண்டித்தும், அங்கு பௌத்த பிக்குகளின் தலைமையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கைகளைக் கண்டித்தும் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் 04

## காணி மோசடி: பெண் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – நல்லூர் பகுதியில் உள்ள காணியொன்றை மோசடியாக உரிம மாற்றம் செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 04

## விமானப்படைக் கண்காட்சிக்கு கஞ்சாவுடன் வந்த பெண் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் இலங்கை விமானப்படையின் கண்காட்சிக்குக் கேரள கஞ்சாவுடன் வந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நயினாதீவைச் சேர்ந்த 26 வயதான பெண்ணே இரண்டு கிலோகிராம் எடையுள்ள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை விமானப்படையின் 73ஆவது வருட நிறைவை முன்னிட்டு “வான் சாகசம் – 2024” கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் – முற்றவெளி மைதானத்தில் இன்று ஐந்தாவது நாளாகவும் இடம்பெற்று வருகின்றன.

இதன்போது கண்காட்சி பிரதான நுழைவாயிலில் கண்காட்சிக்குப் பொதியுடன் வந்த பெண்ணைச் சோதனையிட்டபோதே கஞ்சா இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.



கைதான பெண் விமா 04



# இராணுவம் வசமுள்ள காணிகளை மக்களிடம் மீளக் கையளிக்கும் நிகழ்வு

**(பிரபாகரன் டிலக்சன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள 110 ஏக்கர் காணிகளை உத்தியோகபூர்வமாகப் பொதுமக்களிடம் மீளக் கையளிக்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

இன்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுமக்களிடம் காணிகளை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஜே94, ஜே 146, ஜே 235, ஜே 240, ஜே 241 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இராணுவ வசம் உள்ள 70 ஏக்கர் காணிகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் கே.என் 11, கே.என் 23, கே.என் 08, கே.என் 43, கே.என் 67, கே.என் 76 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இராணுவ வசம் இருந்த 40 ஏக்கர் காணிகளும் விடுவிக்கும் காணி ஆவணங்கள் மாவட்ட செயலாளர்களிடம் வழங்கி வைக்கப்பட்டன.

அதன்பிரகாரம் யாழ். மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட 70 ஏக்கர் காணிகளுக்கான ஆவணம் பதில் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபனிடமும், கிளிநொச்சி மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட 40 ஏக்கர் காணிகளுக்கான ஆவணம் கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலாளர் நளாயினி இன்பராஜிடமும் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகர ரத்நாயக்க, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி சந்தன விக்கிரமசிங்க மற்றும் துறைசார் அதிகாரிகள், முப்படையினர், காணி உரிமையாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.













# வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்

## மாற்று ஆடைகள் இன்றி அவர்கள் தவிப்பு

(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 8 பேரும் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு இன்று அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

மகா சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்கள் எனவும், கைது செய்யப்பட்டர்களில் காயங்கள் காணப்படுகின்றன எனவும் கைது செய்யப்பட்ட 8 பேர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்கள்.

இதனையடுத்து, எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மேற்படி 8 பேரையும் சட்ட வைத்திய அதிகாரியிடம் கொண்டு சென்று முன்னிலைப்படுத்துமாறு மன்று உத்தரவிட்டிருந்தது. அதற்கமைவாக இன்று சட்ட வைத்திய அதிகாரிடம் அவர்கள் அழைத்து செல்லப்பட்டார்கள்.

இன்று விடுமுறை தினம் என்பதால் சிறைக் கைதிகளைப் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை. இதனால் வைத்தியசாலையில் வைத்து அவர்களுக்கான மாற்று ஆடைகள் வழங்குவதற்குக் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், சிறைக் காவலர்கள் அதற்கு அனுமதி வழங்கியிருக்கவில்லை. இதனால் கடந்த இரு தினங்களாக அவர்கள் கைது செய்யப்படும்போது அணிந்திருந்த ஆடைகளே அணிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிறந்தநாள் விழாவில் போதைபொருள்; 27 பேரைக் கைது செய்தது பொலிஸ்!

பிறந்தநாள் விழாவில் போதை பொருள் பாவித்த குற்றச்சாட்டில் இருபத்தேழு பேரை கஹதுடுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவி ஒருவரின் பிறந்தநாள் விழாவுக்கு முகநூல் ஊடாக அழைக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவிகள் ஐவர் உட்பட இருபத்தேழு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (8) இரவு இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் தனியார் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் ஐந்து மாணவிகள் மற்றும் 12 ஆண் மாணவர்கள், மூன்று தகாத தொழில் நடவடிக்கையில் ஈடுப்படும் பெண்கள் உட்பட இருபத்தேழு பேர் அடங்குகின்றனர் என்ற தெரிவிக்கப்பட்டுள்ளது.

தியத்தலாவ பிரதேசத்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்க ஹோமாகம உடுவான பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கு 45 ஆயிரம் ரூபா வாடகைக்கு விடப்பட்ட வீட்டில் அவரது இருபத்தி



இரண்டாவது பிறந்தநாளை முன்னிட்டு இந்த விருந்து இடம்பெற்றுள்ளது.

போதைப் பொருளை நுகர்ந்து கொண்டிருந்த நிலையிலேயே இவர்களைக் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளில், காலி பிரதேசத்தைச் சேர்ந்த நண்பர்கள் நால்வர் வாடகைக்கு எடுத்த காரில் விருந்துக்கு போதைப் பொருள் கொண்டு வந்தமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து 20 மில்லிகிராம் ஹஷிஸ் போதைப் பொருள், வேகன் ஆர் ரக கார், மூன்று கையடக்கத் தொலைபேசிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஹதுடுவ பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்கள் விமானப் படையில் இணைய வேண்டும்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்கள் இலங்கை விமானப் படையில் இணைய வேண்டும் என்று இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த விமானிகளும் இலங்கை விமானப்படையின் ஒரு அங்கமாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை விமானப் படையின் 73 ஆவது வருட நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கண்காட்சி நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை விமானப் படையின் 73 ஆவது வருட நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கண்காட்சி நிகழ்வுக்கு யாழ். மக்களின் பாரிய வரவேற்புக் கிடைத்துள்ளது. இது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களும் இந்த கண்காட்சியில் பங்கேற்றுள்ளமை பாராட்டத்தக்க விடயம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### விமானப்படைக்....

னப்படையினரால் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டநிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### இந்திய....

பயணித்த மூன்று படகுகளும் கைப்பற்றப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் – காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே நேற்று இரவு 22 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்கள், காங்கேசன்துறை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

அவர்களை விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### காணி மோசடி....

இது தொடர்பில் அறிந்து கொண்ட நபர் , தனக்குத் தெரியாமல் தனக்குச் சொந்தமான காணியை உரிம மாற்றம் செய்து மற்றைய நபர் மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மோசடியான முறையில் காணி உரிம மாற்றம் செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவரைக் கைது செய்துள்ளனர்.

நல்லூர் பகுதியில் மூவருக்குச் சொந்தமான காணியை ஒருவர் காலமான நிலையில், மற்றைய நபர் வெளிநாட்டில் வசித்து வந்த நிலையில் அவருக்குத் தெரியாமல் மற்றையவர் தனது பெயருக்குக் காணியை உரிம மாற்றம் செய்துள்ளார்.

### மீண்டும் இன....

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

“இலங்கையின் அரசியல் சாசனத்தின் பிரகாரம் இலங்கை குடிமக்கள் தாம் விரும்பிய மதத்தை பின்பற்றவும் வழிபடவும் அவர்களுக்கு முழுமையான உரித்துண்டு. ஆனால், அதேசமயம் இலங்கையில் பௌத்தத்திற்கு முதலிடம் என்றும் கூறப்படுகின்றது. அதன் காரணமாக பௌத்த பிக்குகளும் இராணுவத்தினரும் பொலிஸாரும் ஒன்றிணைந்து ஏனைய மதத்தலங்களை அழித்தொழிப்பதும் அந்த இடங்களில் புத்த விகாரையைக் கட்டுவதுமான செயற்பாடுகளில் கடந்த பல தசாப்தங்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வடக்கின் சகல மாவட்டங்களிலும் அதனைப் போன்றே திருகோணமலையிலும் கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் சிங்கள மக்களோ பௌத்த மக்களோ வாழாத பிரதேசங்களில் ஏனைய மதத்தலங்கள் இருந்த புராதன இடங்களில் புத்த விகாரைகளை நிறுவுகின்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசின் பூரணமான அனுசரணையுடனும் நிதிப்பங்களிப்புடனும் இந்த விடயங்கள் செயற்படுத்தப்படுகின்றன. கடந்த 8ஆம் திகதி சிவராத்திரியின் பொழுது வவுனியா மாவட்டத்தின் வெடுக்குநாறிமலையில் பல்லாண்டுகாலமாக வீற்றிருக்கும் ஆதிசிவன் கோயிலில் மகா சிவராத்திரியைக் கொண்டாடுவதற்காகக் கூடியிருந்த சிவபக்தர்களைப் புத்த பிக்குகளும் பொலிஸாரும் அதிரடிப் படையினரும் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு அச்சுறுத்தியுள்ளதுடன் பலரைக் கைது செய்துமுள்ளனர்.

இரவு முழுவதும் கண்விழித்து சிவனை வழிபட்டு அவர் அருளைப் பெறுவதற்கான சைவ மக்களின் வழிபாட்டு முறையே மகா சிவராத்திரியாகும். வெடுக்குநாறி மலையில் மக்கள் வழிபடுவதற்கு வவுனியா நீதிமன்றமும் ஆணை வழங்கியிருக்கக்கூடிய நிலையில், இரவு வழிபாடுகளில் ஈடுபடக்கூடாது என்று சொல்வதற்கும் அங்கு சென்ற அடியார்களை அடித்துத் துன்புறுத்துவதற்கும் பொலிஸாருக்கு எந்தவித அதிகாரமோ உரிமையோ கிடையாது.

நீதிமன்றத்தின் வழிகாட்டுதலுக்கு இணங்க அதன்பிரகாரமே அங்கு சகல வழிபாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே, அங்கு சட்டம் ஒழுங்கு சீர்கெடுவதற்கான எத்தகைய முயற்சிகளும் இடம்பெறவில்லை. ஆனால், வடக்கு, கிழக்கின் பல பகுதிகளில் முக்கியமாக கன்னியா வெந்நீரூற்று, குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை உள்ளிட்ட மேலும் பல புராதன சைவ சமய பிரதேசங்களில் புத்த பிக்குமார்களும் அவர்களுடன் இணைந்த குண்டர் கூட்டங்களும் சேர்ந்து தொடர்ச்சியாக பிரச்சினைகளை உருவாக்கி வருவது அரசுக்கும் ஜனாதிபதிக்கும் வெளிப்படையாகத் தெரியும். ஆனால், இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு எத்தகைய உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

மிக நீண்டகாலமாக இந்நாட்டில் இன விடுதலைக்கான போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். பல்லாயிரம் கோடி பெருமதியான சொத்துகள் அழிக்கப்பட்டன. நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்வதற்கும் அதுவே காரணமாகவும் அமைந்தது. இன்று மீண்டும் ஒரு மதப் பிரச்சினையின் ஊடாக இன மோதலுக்கான அத்திவாரம் இடப்படுகின்றது.

தமிழ்மக்கள்மிகப்பெரும்பான்மையாக வாழ்கின்ற வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தென்பகுதியிலிருந்து பௌத்த பிக்குகள் வருவதும் இது தங்களது பிரதேசங்கள் என்று உரிமை கோருவதும் அங்கு புத்த கோயில்களைக் கட்டுவதும் சிங்கள மக்களைக் குடியேற்றுவதும் என்பது யுத்தத்துக்குப் பின்னர் ஒரு தொடர்கதையாக நிகழ்கின்றது. இவை கட்டுப்படுத்தப்படாவிட்டால் இலங்கை தொடர்ந்தும் வங்குரோத்து அடைந்த நாடாகவே இருக்கும். தமிழ் மக்களைத் துன்புறுத்துவதும் அவர்களது மத கலாசார நடவடிக்கைகளை சீர்குலைப்பதும் இந்த நடவடிக்கைக்கு இராணுவத்தினரையும் பொலிஸாரையும் ஈடுபடுத்துவதும் வெறுக்கத்தக்க அநாகரிகமான செயலாகும்.

ஜனாதிபதியும் அரசும் உதட்டளவில் இன நல்லிணக்கத்தைப் பற்றிப் பேசாமல் அதனைச் செயலளவில் காட்ட வேண்டிய தருணம் இது.

இலங்கைக்கு மிகப் பெருமளவிலான சுற்றுலாப் பிரயாணிகளாக இந்திய மக்களே வருகின்றனர். அவர்களில் மிகப் பெருமளவிலானோர் இந்துக்களாகவும் இருக்கின்றனர். அவர்களோடு மட்டுமல்லாமல் ஏனைய நாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளும் புராதனச் சின்னங்களைக் கண்டு தரிசிக்கவே விரும்புகின்றனர். ஆகவே, அந்தப் புராதனச் சின்னங்கள் எல்லாவற்றையும் தகர்த்தெறிந்துவிட்டு, சுற்றுலாப் பிரயாணிகளே வாருங்கள் என்று கூவுவதில் அர்த்தமில்லை.

இலங்கையின் மிகப்பெருமளவிலான வருமானம் சுற்றுலாத்துறையையும் நம்பியிருக்கின்றது. ஆனால், அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற சுற்றுலாத்துறையையும் நிர்மூலமாக்கும் நடவடிக்கைகளிலேயே இன்றைய அரசு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இது நாட்டை மேலும் வங்குரோத்து நிலைக்கு இட்டுச் செல்வதுடன் இலங்கையின் மதிப்பை சர்வதேச மட்டத்தில் குறைப்பதற்குமே உதவுமே தவிர, நாட்டை சுபீட்சத்தை நோக்கி இட்டுச் செல்லாது என்பதை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.” – என்றுள்ளது.





# பொலிஸாரின் அத்துமீறல்களுக்கு எதிராக யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம் கண்டனம்

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் தலத்திலே வழிபாட்டிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயக் குருக்கள், பொதுமக்கள், அரசியல் தலைவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்களையும், அவர்கள் அங்கு இருந்தோரில் 8 பேரைக் கைது செய்தமையையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“மகா சிவராத்திரி சைவ, இந்து மக்களுக்கு மிகவும் முக்கியமான தினங்களிலே ஒன்று. அந்தத் தினத்திலே உலகெங்கும் வாழும் சைவ, இந்து மக்கள் ஆலயங்களிலே இரவு முழுவதும் விழித்திருந்து சமய அனுட்டானங்களிலே ஈடுபடுவர். அவ்வாறான ஒரு வேளையிலே பொலிஸார் ஆதி லிங்கேஸ்வரர் தலத்தினுள் நுழைந்து அது தொல்பொருள் ஆய்வுக்குரிய பாதுகாக்கப்பட்ட இடம் என்ற போர்வையிலே அங்கு அனுட்டானங்களிலே ஈடுபட்டிருந்த மக்களிற்கு பல இடையூறுகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான குடிநீர் கிடைப்பதனைத் தடுத்து நிறுத்தி இருக்கின்றனர். பின்னர் பூசைகளினைக் குழப்பி உள்ளனர். வழிபாட்டில் ஈடுபட்டோரினை பலவந்தமாக வெளியேற்றியும் கைது செய்துமுள்ளனர். இவை யாவும் அந்த மக்களின் சமய ரீதியிலான உரிமைகளை மோசமாக மீறும் செயல்களாகும் என்பதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

வெடுக்குநாறிமலையில் இடம்பெற்றிருக்கும் இந்தச் சம்பவம் வெறும் வன்முறையும், அத்துமீறலும் மாத்திரம் அல்ல. இது இலங்கையில் தொடரும் சிங்கள பௌத்த மேலாண்மைவாதக் கருத்தியலின் ஆகப் பிந்திய வன்முறை வடிவங்களிலே ஒன்று. சிறுபான்மையாக இருக்கும் மக்களின் மத உரிமைகளை பாதிக்கும் செயன்முறைகளினை இலங்கையினை ஆட்சி செய்யும் அரசுகள் காலங்காலமாக மேற்கொண்டு வந்திருக்கின்றனர்.

இந்த செயன்முறைகளினால் இந்து சமயத்தவர் மாத்திரமல்லாது, கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்களும் பாதிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசியல் யாப்பினைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில், சிறுபான்மை மக்களின் மத உரிமைகளை மீறும் போக்குக்கள் யாப்பின் கருத்தியலுக்குள்ளேயே பொதிந்து போய் இருக்கிறது என்பதனை நாம் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியம்.

வெடுக்குநாறிமலைச் சம்பவம் இலங்கை அரசின் மதவாதக் குணாம்சத்தினால் ஏற்பட்ட ஒரு கட்டமைப்பு சார் விடயமாகவே பார்க்கப்படல் வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கையின் வடக்கு, கிழக்கினைப் பௌத்த மயமாக்கம் செய்வதன் மூலமும், சிங்கள மயமாக்குவதன் மூலமும் இந்தப் பிராந்தியத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் வலுவிழக்கச் செய்யும் செயன்முறைகளிலே இலங்கை அரசுகள் பல தசாப்தங்களாக ஈடுபட்டு வந்திருக்கின்றன. இந்தச் செயன்முறைகளின் ஒரு வடிவமாகத் தொல்பொருளியல் ஆய்வு என்ற போர்வையில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் தலத்தினையும் ஏனைய பல சைவ, இந்து மக்கள் வழிபடும் தலங்களையும் சிங்கள பௌத்தமயமாக்கும் நடவடிக்கைகள் அண்மைய சில வருடங்களாகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பில் இருந்து, மையப்படுத்தப்பட்ட முறையிலே, இராணுவக் கட்டமைப்புக்களின் துணையுடன், சிங்கள பௌத்தக் கருத்தியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்தத் தொல்பொருளியல் செயன்முறைகளின் போது வடக்குக் கிழக்கிலே பல சந்ததிகளாக இந்தத் தலங்களிலே தமது சமய அனுட்டானங்களில் ஈடுபடும் மக்களின் உரிமைகளுக்கும், கருத்துக்களுக்கும் எந்த விதமான இடமும் வழங்கப்படுவதில்லை. மாறாக தொல்பொருளியல் ஆய்வு என்பது இந்த மக்களின் மீதும், அவர்களின் சமய நம்பிக்கைகள் மற்றும் செயன்முறைகளின் மீதும் ஒரு வன்முறையாகவே ஏவப்படுகிறது. இந்த வன்முறையின் ஒரு விளைவே கடந்த சிவராத்திரி தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களும் கைதுகளும்.

கைது செய்யப்பட்ட அனைவரும் உடனடியாக வழக்குகள் எதுவுமின்றி விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், வடக்குக் கிழக்கிலே தொல்பொருளியல் ஆய்வு என்ற பெயரிலும், வனப் பாதுகாப்பு என்ற பெயரிலும், மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் என்ற பெயரிலும் ஏனைய வடிவங்களிலும் இடம்பெறும் சிங்கள பௌத்த மயமாக்கற் செயன்முறைகள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோருகின்றது.

இனவாதத்தினையும், மதவாத்தினையும் முன்னெடுக்கும் அரசியலமைப்பும், அரசுக் கட்டமைப்பும் மாற்றப்பட்டால் மாத்திரமே இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் இன, சமய ரீதியிலே சமத்துவம் மிக்கவர்களாக வாழ முடியும். வெடுக்குநாறிமலைப் பிரச்சினைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அனைவரும் இவ்வாறான அரசியல் மாற்றங்களினை வலியுறுத்துவதன் மூலமாக இனவாதத்தினையும், மதவாதத்தினையும் முறியடிக்க முன்வர வேண்டும் என ஆசிரியர் சங்கம் கோருகின்றது.” - என்றுள்ளது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தெரு நாய்ச் சண்டை

தெரு நாய்கள் அல்லது கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் தொடர்பில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் நாடாளுமன்றத்தில் விடுத்த அறிவிப்பு பெரும் சர்ச்சையை உருவாக்கி இருக்கின்றது.

சரியான தரவுகள் அற்ற - அடிப்படையில்லாத - வெளிப்படுத்தல் இது என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரின் நாடாளுமன்ற அறிவிப்பை கடுமையாக வைது இருக்கின்றார் மக்கள் தொகை மனிதநேய மேலாண்மைக்கான கால்நடை மருத்துவர்கள் சங்கத்தின் ஆலோசகர் டாக்டர் சமித் நாணயக்கார.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுமார் 62 லட்சம் தெருநாய்கள் சுற்றித் திரிகின்றன எனவும், இந்த நிலைமை சிகிரியா போன்ற சுற்றுலாப் பகுதிகளில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஆனால், "எங்கள் கணக்கீடுகளின்படி, நாட்டில் 21 லட்சம் நாய்களே உள்ளன. அவற்றில் மூன்று சத வீதமே தெருநாய்களாக கருதப்படலாம்." என்று டாக்டர் சமித் நாணயக்கார கூறுகிறார்.

சமூகத்திற்குள் தவறான எண்ணத்தை ஏற்படுத்துவதற்கு, தவறான புள்ளிவிவரங்களை மேற்கோள்காட்டி, நாட்டில் முப்பது லட்சம் குரங்குகள் உள்ளன என்று குரங்குகளின் எண்ணிக்கை குறித்து முன்னர் தவறான அறிக்கைகள் பரப்பப்பட்டன என வும் அவர் சுட்டிக் காட்டினார்.

"கால்நடை மருத்துவர்களாகிய நாங்கள் கடந்த 24 ஆண்டுகளாக இந்த நாய் எண்ணிக்கையில் ஈடுபட்டுள்ளோம். 2007 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் முப்பது லட்சம் நாய்கள் இருந்தன. பின்னர், நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டங்கள் அரசு மற்றும் விலங்குகள் நலச் சங்கங்களால் நடத்தப்பட்டன. இந்த திட்டங்களின் விளைவாக நாட்டில் தற்போதைய நாய்களின் எண்ணிக்கை 21 லட்சத்துக்கும் குறைவாகவே உள்ளது." என்று அவர் கணக்குக் கூறுகின்றார்.

"ஆனால் நாட்டில் 62 லட்சம் தெரு நாய்கள் இருக்கின்றன என அமைச்சர் கூறினார். இருப்பினும், நாட்டில் தெரு நாய்கள் குறைவாகவே உள்ளன. நாய்கள் தெருநாய்களாகக் கருதப்பட்டாலும், பெரும்பாலான நாய்கள் சுதந்திரமாக திரிந்தாலும், அவற்றின் உரிமையாளர்கள் உள்ளனர். பொதுவாக மத வழிபாட்டுத் தலங்கள், முச்சக்கர வண்டிகளின் தரிப்பிடங்கள், பூங்காக்கள் மற்றும் கடைகளுக்கு அருகில் வாழும் நாய்கள் சமூக நாய்களாகவே கருதப்படுகின்றன" என்று டாக்டர் நாணயக்கார விளக்கம் வேறு கூறுகின்றார்.

எனவே, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பொய்யான அறிக்கையை வெளியிட்டு, நாட்டில் தற்போதுள்ள நாய் இனத்தின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளார் என டாக்டர் நாணயக்கார வேதனை வெளியிடுகின்றார்

"சிகிரியா போன்ற சுற்றுலாப் பகுதிகளில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும் நிலைமையாக நாய்கள் பெருகியுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் கூறினார். ஆனால், கடந்த ஆறு வருடங்களாக நாய்களின் எண்ணிக்கையை முறையாகக் கட்டுப்படுத்தித் தடுப்பூசிகள் போடப்பட்ட இடமே சிகிரியா. நாய்களை கட்டுப்படுத்தும்திட்டங்கள்குறித்து, நாடாளுமன்றத்தில் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடுவது தகுதியற்றது" என்றும் டாக்டர் நாணயக்கார கூறினார்.

"நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும், கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டங்களைத் தொடரவும் இருபது கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால், கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டங்களைத் தொடர்வதற்கான உபகரணங்களுக்காக இந்த ஆண்டு மாவட்டங்களுக்கு நிதி கிடைக்கவில்லை" என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

பல விலங்குகள் நல அமைப்புகள் மாவட்டத்தில் ஆண்டுதோறும் 35,000 முதல் 40,000 விலங்குகளுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையில் ஈடுபட்டன. சுகாதார அமைச்சின் சில அதிகாரிகள் இந்த அமைப்புகளில் இணைவதற்கு கூட உடன்படவில்லை என்று டாக்டர் நாணயக்கார சுட்டிக்காட்டியிருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

நாய்கள், குரங்குகள், மயில்கள் போன்றவை தொடர்பில் விஞ்ஞான ரீதியான - புள்ளி விவர முறைகளில் துல்லியமான - கணக்கெடுப்புகளை மேற்கொள்ளாமல் இந்த சர்ச்சைகள் குறித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவது கஷ்டமே.



# வெடுக்குநாறி மலையில் அரங்கேறியுள்ளது இனவெறியின் உச்சக் கட்டச் செயற்பாடுதான்!

## வெடுக்குநாறிமலை சிவன் ஆலயத்தில் நடந்துள்ள சம்பவத்துக்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் தெரிவிப்பு

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேசுவரர் ஆலயத்தில் வழிபட்ட தமிழர்கள் மீது இலங்கை அரசு தாக்குதல் நடத்திக் கைது செய்துள்ளமை இனவெறியின் உச்சம் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறிமலை சம்பவம் தொடர்பில் தனது எக்ஸ் பக்கத்தில் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

ஈழத் தாயகத்தில் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலையில் சிவராத்திரியை முன்னிட்டு நீதிமன்றத்தில் அனுமதி பெற்று வழிபடச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட தமிழர்களைத் தடுத்து, அவர்கள் மீது இலங்கை இனவாத அரசின் பொலிஸார் கொடுந் தாக்குதல் நடத்தியுள்ளமை வன்மையான கண்டனத்துக்கு உரியது.

ஈழ நிலத்தில் 2 லட்சம் அப்பாவித் தமிழர்களைத் துள்ளத் துடிக்கப் படுகொலை செய்து முடித்த பிறகும், தமிழர்கள் மீதான வன்மமும், இனத் துவேசமும் துளியும் அடங்காது இன அழிப்பு நடவடிக்கையைத் தொடர்ச்சியாக அரங்கேற்றி வருகின்றது.

அதன் நீட்சியாக, தமிழர் அடையாளச் சிதைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, தமிழர் பண்பாட்டு விழுமியங்களையும், தொன்மச் சான்றுகளையும் மெல்ல மெல்ல அழிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது சிங்கள இனவாத அரசு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு மண்டபத்தைத் தகர்த்தது, தமிழர் வழிப்பாட்டுத்தலங்களை இடித்து பௌத்த விகார்களை நிறுவி வருவது, தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களைச் சிதைப்பது என தமிழர்கள் வாழ்விடங்கள் என்பதற்கான அடையாளங்கள் யாவற்றையும் முற்றாக அழிப்பதும், தமிழர்களுக்குச் சொந்த மான நிலங்களைப் பறித்து, சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழர் பகுதிகளை இராணுவத்தின் துணையோடு சிங்கள மயமாக்குவது இனப்படு கொலைப் போருக்கு பிந்தைய கடந்த 14 ஆண்டு கால கட்டத்தில் தொடர்ச்சியாக இத்தகைய கொடுமைகளைச் செய்து வருகிறது சிங்கள இனவாத அரசு.

அருகாமையில் இருக்கும் ஒரு நாட்டில் இத்தகைய இன வெறிக் கொடுமைகளும், பண்பாட்டு அழிப்பு நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வரும்போது, இந்தியாவை ஆளக்கூடிய பா.ஜ.க. அரசு அது குறித்து எவ்வித எதிர்வினையும் ஆற்றாது அமைதி காப்பது ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் இழைக்கும் பச்சைத் துரோகமாகும்.

பாகிஸ்தானிலும், பங்களாதேசத்திலும் வாழும் இந்துக்களுக்குப் பாதிப்பு என்றால் பாய்ந்து பாதுகாக்கத் துடிக்கும் பா.ஜ.க. அரசு, ஈழத்தில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படும்போது ஏன் வாய்திறப்பதில்லை? குறைந்த பட்சம் ஈழத்தில் பல்லாயிரக் கணக்கான இந்து கோவில்களை இடிக்கும் போதாவது கண்டித்திருக்கலாமே?. இன்றுவரை அதனைச் செய்யாது, சிங்கள – பௌத்த வெறியர்களுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது இந்துத்துவ பா.ஜ.க. அரசு.

'தமிழர்கள்தான் இந்துக்கள் இந்துக்கள்தான் தமிழர்கள்' என்று பொய்யுரைத்து வாக்கரசியல் செய்யும் பா.ஜ.க., சிங்கள இனவாதத்தால் தமிழர்களது வழிப்பாட்டுத் தலங்கள் தாக்குதலுக்குள்ளாகும் போதும், தமிழர்கள் இரண்டாந்தர குடிமக்களாக நடத்தப்படும்போதும், பாரிய இனப் படுகொலைக்கு ஆட்படுத்தப்படும் போதும் அமைதி காப்பதன் மூலம் தமிழர்கள் இந்துக்கள் இல்லை என்பதை மீண்டும் மீண்டும் பா.ஜ.க. உணர்த்திக் கொண்டிருக்கிறது.

அதனால்தான், முல்லைத்தீவில் நீராவியடியில் பிள்ளையார் கோயில் வளாகத்துக்குள் புத்த பிக்குவின் உடலை எரித்தபோதும், ஆதிசிவன் ஐயனார் கோயிலை இடித்து பௌத்த விகாரை நிறுவுகிறபோதும், இன்றைக்கு வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேசுவரர் ஆலயத்தில் வழிபட்ட தமிழர்கள் மீது இலங்கை இனவாத அரசு தாக்குதல் நடத்தியுள்ள போதும் எவ்வித எதிர்வினையும் ஆற்றாமல் அமைதி காக்கிறது.

ஆகவே, வழிபாட்டு உரிமையையும், வாழ்வதற்கான உரிமையையும் மறுத்து தமிழ் மக்களை அழித்தொழிக்கும் இலங்கையின் இனவாதக் கொடுமைகளை ஐ.நா. மன்றம் உள்ளிட்ட அமைதியை விரும்பும் பன்னாட்டு அமைப்புகள் உடனடியாகக் கண்டிக வேண்டும். தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வான ஈழத் தாயக விடுதலைக்கான பொது வாக்கெடுப்பை நடத்த முன்வர வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.–என்றுள்ளது.



# திருக்கோணேஸ்வர சிவராத்திரியில் போரூர் ஆதீனத்தின் சொற்பொழிவு

(நூருல் ஹுதா உமர்)

திருக்கோணேஸ்வர ஆலய சிவராத்திரி நிகழ்வில் போரூர் ஆதீனம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதஸ்தல அடிகளார் மற்றும் பத்மஸ்ரீ டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் இவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரூர் ஆதினம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதஸ்தல அடிகளாரின் தெய்வீக சொற்பொழிவும், டாக்டர் சீர்காழி சிவசிதம்பரத்தின் தெய்வீக கானங்களும் திருக்கோணேஸ்வர ஆலய சிவராத்திரி நிகழ்வில் இடம்பெற்றன.

பெருந்திரளான பக்தர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.





# அகில இலங்கை ஓவியப் போட்டியில் ஓட்டமாவடி தாருல் உலூம் சாதனை!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

அகில இலங்கை ஓவியப் போட்டியில் மட்டக்களப்பு மத்தி, ஓட்டமாவடி தாருல் உலூம் வித்தியாலய மாணவிகள் மாவட்ட மட்டத்தில் முதலாம் பிரிவில் 1 ஆம், 2 ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

ஓவியப் போட்டியில் எம்.ஆர். ஆரியா ஸயினப் முதலாம் இடத்தையும், எம்.எம்.ஆயிஸ் அயினா இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.





# அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மாணவருக்கு கற்றல் உபகரணம் வழங்கிய இணைந்த கரம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள அக்கறைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய கல்லூரியில் கல்வி கற்கும் தந்தையை இழந்த மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வானது பாடசாலையின் அதிபர் க.ஜயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

'கல்விக்கு வறுமை தடையாக இருக்க கூடாது, எழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்' எனும் தொனிப் பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை பல பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்களான சி.மதியழகன் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ். அகிலன், பழைய மாணவர் சங்க உறுப்பினர் வி.சுகிர்தகுமார், லக்மிகாந், பாடசாலையின் ஆசிரியர்களான செவ்வேல் குமரன், சுதர்சன், கின்ஸ்லி, சத்தியராஜ், அற்புதநாதன், திருமதி எல்.திருச்செல்வம், திருமதி எம்.ஜீவிதா, பாடசாலை உத்தியோகத்தர்களான பத்திமா, ரோசானா, திருமதி கே.கிரியாழினி மற்றும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான, லோ.கஜரூபன், சி.காந்தன் ஆகியோர் கலந்து கொண்டு 50 மாணவர்களுக்கான பாடசாலைக்கு செல்வதற்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பவற்றை வழங்கினர்.







# மதுவரி ஆணையாளராக தர்மசீலன்

(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி ஆணையாளராக (ஆதாயம்) கனகசபை தர்மசீலன் கடமையேற்றுள்ளார்.

மதுவரித் திணைக்களத்தில் மதுவரி பரிசோதகராக 1986 இல் இணைந்து பணியாற்றினார். தொடர்ந்து அத்தியட்சகர், உதவி ஆணையாளர் ஆகிய பதவி உயர்வடைந் து பின் திணைக்கள தலைமையகத்தில் பிரதி மதுவரி ஆணையாளராக கடமையாற்றினார்.

இந்த நிலையில் மதுவரி ஆணையாளராக (ஆதாயம்) கடந்த வாரம் கடமையேற்றுள்ளார். இந்த வருடம் இறுதிப் பகுதியில் இவர் ஓய்வுபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.





# மட்டக்களப்பில் நன்னீர் மீன்வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் கலந்துரையாடல்!

(பழுவூரான்)

மட்டங்களப்பு மாவட்டத்தில் நன்னீர் மீன்வளர்ப்பை அபிவிருத்தி செய்வதற்கான உயர்மட்ட கலந்துரையாடல் மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்றது.

இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் வி.விஜயரத்ன தலைமையிலான குழுவினர் மாவட்டத்தில் நன்னீர் வளர்ப்பை அதிகரிப்பதற்கான முன்னாயத்தக் கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது நன்னீர் மீன்வளர்ப்புக்குஉகந்த நிலங்கள் வன திணைக்களத்தில் காணப்படுவதால் அவர்களுடன் இணைத்து மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிக்க முடியும் என்று துறை சார் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தத் திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் மீன் குஞ்சு பொரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படவுள்ளதால் மாவட்டத்தில் ஊட்டச்சத்து நிறைந்த மீன் நுகர்வை அதிகரிக்க முடியும் என்று கருத்துப் பரிமாறப்பட்டது.

சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத முறையில் நன்னீர் மீன்வளர்பை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இதன் போது அரச அதிபர் கருத்து தெரிவித்தார்.

புதிய தொழில் நுட்பத்தின் மூலம் நன்னீர் மீன் வளர்ப்பில் சிறந்த விளைச்சலைப் பெற முடியும் எனத் துறை சார் நிபுணர்கள் தெரிவித்தனர். வன இலாகாவின் அனுமதி பெற்று இந்தத் திட்டத்தை நடைமுறைபடுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகவும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், ஆர்.எச்.பொத்துவில, பட்டிப்பளை பிரதேச செயலாளர் எஸ். சுதாகரன், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் பிரத்தியோக செயலாளர் த.தஜீவரன், மாவட்ட நீர் உயிரின வளப்பு விரிவாக்கல் உத்தியோகத்தர் ஜே. நெல்சன், துறைசார் நிபுணர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வர்த்தக கண்காட்சி!

(பழுவூரான்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வர்த்தக கண்காட்சி ஒன்று மட்டக்களப்பு கல்லடிப் பழைய பாலத்தில் இரு நாள்கள் இடம்பெற்றன.

"நமது வீட்டையும் சமூகத்தையும் செழிப்பாக வைத்திருக்கும் பெண்களை சர்வதேச பெண்கள் தினத்தில் வாழ்த்துவோம்" எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பில் இயங்கி வரும் சூர்யா பெண்கள் அபிவிருத்தி அமைப்பினரால் இரண்டு நாள் வர்த்தக கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



வர்த்தகக் கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளீதரன் கலந்து கொண்டு வர்த்தக கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

வர்த்தகக் கண்காட்சி சுய தொழில் முயற்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.




# தமிழ்ப் பிரதேசத்தில் நச்சுக் கலைகளின் ஊடுருவல்களைத் தடைசெய்ய வேண்டும்

## கலாநிதி க. சிதம்பநாதன் தெரிவிப்பு

எமது பண்பாட்டையும் கலாசாரத்தையும் சீரழிக்கும் வகையில் – காணாமல் போகச் செய்யும் வகையில் – தமிழ்ப் பிரதேசத்தில் நச்சுக் கலைகள் ஊடுருவுகின்றன.

இது தடை வேண்டும் என்று கலாநிதி க. சிதம்பநாதன் தெரிவித்துள்ளார்.

‘ஆற்றல் மிகு ஈழத் தமிழ் சமூகத்தை உருவாக்கக் கலைப்பணி ஆற்றுவோம்’ என்ற கருப் பொருளிலான கலந்துரையாடல் நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், கந்தர்மடம், பழம் வீதியில் அமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் கலாநிதி க. சிதம்பரநாதனின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கலை நிகழ்ச்சிகள் என்றால் என்ன?, கலை நிகழ்ச்சிகளை எப்படி நிகழ்த்துவது?, கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தும் போது மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய விளைவுகள் யாவை? போன்ற வினாக்கள் தொடர்பாகவும் , அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த இசை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பல குழப்பமான கதையாடல்கள் நமது சமூகத்தில் நிலவுகின்ற பின்னணியில் ஈழத்தமிழரிடையே கடந்த காலங்களில் நிலவிய கலை நிகழ்ச்சிகள் எத்தகையன?, அவை நிகழ்த்தப்பட்ட முறைமைகள் எத்தகையன?, அவை மக்கள் மத்தியில் ஏற்படுத்திய விளைவுகள் யாவை? என்பவை போன்ற விளக்கங்களுடன் எதிர்காலத்தில் எமது சமூகத்தை ஆற்றல் மிகு சமூகமாக மாற்றுவதற்கு நமக்குத் தேவைப்படும் கலை நிகழ்ச்சிகள் பற்றிய உரையாடல்களும் இடம்பெற்றன.

ஊடகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கூடியிருந்த இந்த அரங்கில் கலை என்பது பற்றியும் பண்டைய தமிழரிடையேயும் தேசிய விடுதலைப் போராட்ட கால கட்டத்தில் நிகழ்ந்த கலைகள் பற்றியுமான விளக்கங்கள் அரங்க நிகழ்வுகளினூடாக நிகழ்த்தத்தட்டன.

வலிமையான கலைப் பாரம்பரியத்தை உடைய தமிழர்கள் மத்தியில் இன்று நச்சுக்கலைகள் ஊடுருவப்பட்டிருப்பது பற்றியும், அவை விரைவில் தடைசெய்யப்பட வேண்டும் , ஊர் தோறும் மக்கள் கலை உருவாகக்கத்துக்காக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கோரிக்கையுடனான உரையாடல்களும் இதன்போது இடம் பெற்றன.

ஆடல்கள், பாடல்கள், கதையாடல்கள் என ஆற்றுகைகள் வெளிப்பட்டன.

கலைப் பயணத்தில் ஈடுபடும் மனிதர்கள் மற்றவர்களைப் பாவனை செய்யும் நிலையில் இருந்து விடுபட்டு, தாமாகவே செயற்படும் நிலைக்கு வந்து சக்தி மயமான நிலையை அடைதல் முடியும் என்ற அனுபவத்தைப் பகிர்ந்து கொண்ட நிகழ்வாக இந்தக் கலைச் செயற்பாடு அமைந்திருந்தது.

2009 இன அழிப்பின் பின் எமது மக்கள் மத்தியில் தேசிய நீக்கம் . மக்கள் நுகர்வு கலாசாரத்தின் ஊடாகக் குறிப்பாக நச்சுக் கலைகள் ஊடாக மனக் குழப்பங்களுக்கும் தாழ்வுச் சிக்களுக்கு உட்பட்டிருக்கும் நிலையில் அவர்கள் தாழ்வுச் சிக்கலில் இருந்து விடுபட்டு தாமாகச் செயற்படும் இரு செயலூக்க நிலைக்கு தூண்டும் அவசியம் பற்றி அரசியல் ஆய்வாளர்களரும் சட்டத்தரணியுமான ஜோதிலிங்கம் இதன் போது எடுத்துக் கூறினார்.

கலை என்பது மக்களைச் செயலூக்கமான சக்தி நிலைக்குக் கொண்டு வரும் வலிமையான சாதனம் என எடுத்துக் கூறிய கலாநிதி க. சிதப்பரநாதன், இன்று எமது சமூகத்தில் குறிப்பாக புத்தி ஜீவிகள் மத்தியில் கலை பற்றிய திரிவுபட்ட விளக்கம் நிலவிவருவதையும் அதனால் கலையின் வலிமையை அவர்கள் அறியாதிருப்பதையும் எடுத்துக் கூறினார்.

மக்களிடையே படிப்படியாக கலை பற்றிய அனுபவத்தை பரப்பிச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் அத்தகைய செயற்பாட்டில் இணைவதற்கு சமூக செயற்பாட்டாளர்கள் முன்வரவேண்டும் என்பதையும் பகிர்ந்து கொண்டார்.

இன்று பலர் ‘டிஜிற்றல் மீடியா’வில் மூழ்கிக் கிடந்தாலும் அது ஈற்றில் ஒரு மன அழுத்த நிலைக்குக் கொண்டு போகும். உண்மையில் மனிதர்கள் நேரடியாகப் பிரசன்னமாகி, உயிர்ப்பான ஊடாட்ட அனுபவத்தைப் பெற விரும்புகிறார்கள் என்ற விடயம் இந்த நிகழ்வில் பங்கு கொண்டவர்களின் பகிர்வில் மேற்கிளம்பிய ஒரு முக்கிய விடயம்.

இத்தகைய ஒரு கலை அனுபவத்தை மக்கள் பெறும் வகையில் கலை நிகழ்ச்சிகள் ஊர் ஊராக நிகழ்த்தப்படவேண்டும் என்ற உறுதியும் கூடியிருந்தவர்கள் மத்தியில் ஏற்பட்ட நிகழ்வாக இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

**தொகுப்பு:**
**யாழ்.தர்மினி பத்மநாதன்.**






# திருமலை சவேரியார் அதிபருக்கு பிரியாவிடையும் சேவை பாராட்டும்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

திருகோணமலை புனித சவேரியார் மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ். ஜனகன் ஓய்வுபெற்று செல்வதை முன்னிட்டு பாடசாலை சமூகத்தினரால் பிரியாவிடை மற்றும் சேவை நலன் பாராட்டு நிகழ்வு நடத்தப்பட்டன.

பிரியாவிடை நிகழ்வு கல்லூரியின் புதிய அதிபர் சிறிதர ஆனந்தம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந் தினராக திருகோணமலை வலயக்கல்வி அலுவலக திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் மு.மோகனேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாகத் திருகோ ணமலை வலய ஓய்வுநிலை பணிப் பாளர் ந.விஜேந்திரன், ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.அரிய நாயகம், ஓய்வு நிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கோ.செல்வநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.





# தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தில் மகளிர் தினத்தை முன்னிட்டு உதவிகள்







(எம்.ஏ.ஏ.அக்தார்)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் “அவளுடைய பலம் – நாட்டுக்கு முன்னேற்றம்” என்னும் தொனிப் பொருளில் இவ்வருடம் மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் எண்ண க்கரு மற்றும் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது மகளிருக்கான வாழ் வாதார கடன் வழங்கும் நிகழ்வு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் தலைமையில் கல்லாறு மற்றும் மாங்காடு சமுர்த்தி வங்கிகளில் இடம்பெற்றது.

கல்லாறு சமுர்த்தி வங்கியில் இடம்பெற்ற நிகழ்வின் போது கல்லாறு சமுர்த்தி வலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 08 பயனாளிகளுக்கு சுமார் 14 லட்சம் ரூபா சுயதொழில் முன்னேற்றத்துக்காக வழங்கப்பட்டது.

மாங்காடு சமுர்த்தி வங்கி உத்தி யோகத்தர்களால் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார், திட்ட முகா மையாளர் திருமதி விமலா ஜோகேந் திரன், சமுக அபிவிருத்தி உத்தி யோகத்தர் தெ. உதயசுதன் மற்றும் வங்கிகளின் முகாமையாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது காரியப்பர் இல்ல விளையாட்டுப் போட்டி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.ஆரிப் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கல்முனை வலயக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச். எம். ஜாபீர் பிரதம அதிதியாகவும், கல்முனை வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் ரியாஸா, சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலிக், திருமதி மலிக், நிந்தவூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் சாஜித் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.







# வெறுப்பு பேச்சு மற்றும் டிஜிட்டல் கல்வி தடுக்கும் விழிப்புணர்வுச் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

லங்கா ஜாதிக சர்வோதய சிரமதான சங்கம் யுனிசெப் அனுசரணையில் அம்பாறை, ரன்பிமா ஹோட்டலில், வெறுப்பு பேச்சு மற்றும் டிஜிட்டல் கல்வி யறிவைத் தடுப்பது தொடர்பான மூன்று நாள் விழிப்புணர்வுச் செயலமர்வை நடத்தியுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, சர்வோதய சிரமதான சங்கத்தின் நிறைவேற்று பணிப்பாளர் தமித குலநாயக, திட்ட முகாமையாளர் கே.வை.ஏ.சய்ராக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# அக்கரைப்பற்று இராமகிருஷ்ண வித்தி. விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிசன் மகாவித்தியாலயத்தின் இல்ல விளையாட்டு போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

பாடசாலையின் அதிபர் திருமதி ரவிலேகா நித்தியானந்தன் தலைமையில் பிரதி அதிபர் கப்டன் க.ஜனார்தன், உதவி அதிபர் ந.நேசராஜா ஒருங்கிணைப்பில் உடற்கல்வி ஆசிரியர் திருமதி எஸ்.கண்ணதாசன், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கே.ராமிலன் ஆகியோரின் வழிநடத்தலில் இடம்பெற்ற போட்டிகளில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

ஆண்களுக்கான மரதன் ஓட்ட நிகழ்வோடு போட்டி ஆரம்பமானது. தொடர்ந்து பெண்களுக்கான சைக்கிளோட்டமும் இடம்பெற்றது.

எதிர்வரும் 22ஆம் திகதி அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் இறுதிப் போட்டிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# காத்தான்குடியில் மகளிர் தின நிகழ்வு





(எம்.ஏ.ஏ.அக்தார்)

காத்தான்குடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் 'அவளுடைய பலம்-நாட்டுக்கு முன்னேற்றம்' எனும் தொனிப் பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வும் விற்பனைக் கண்காட்சியும் காத்தான்குடி ஹிஸ்புழ்ழாஹ் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா, கணக்காளர் கே.சித்ரா, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.தனுஜா, முஸ்லிம் பெண்கள் காப்பகத்தின் பணிப்பாளர் சல்மா ஹம்ஸா மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம்.றவூப், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எம்.ஜறூப், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பீ.ஜெயராஜ், முகாமைத்துவ பணிப்பாளர் வாமதேவன், சமுர்த்தி வங்கி மற்றும் அமான வங்கி முகாமையாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அழைப்பு அதிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நூறு பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் மற்றும் கைவினைப் பொருள்கள், உணவுப் பண்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதன் போது சிறு தொழில் முயற்சியில் முன்னேறி மேலும் பலருக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்த பெண் சுய தொழில் முயற்சியாளர்கள் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.



# கல்முனை அல் மிஸ்பாஹ் வித்தி. விஞ்ஞான ஆய்வு கூடத் திறப்பு!

(எம்.எம்.றம்ஸீன், எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய விஞ்ஞான ஆய்வு கூட திறப்பு விழாவும், கண்காட்சியும பாட சாலைய அதிபர் எம்.ஐ.அப்துல் றசாக் தலைமையிலும் பிரதி அதிபர் எம்.ஆர்.முஹம்மது நௌசாத்தின் நெறிப் படுத்தலிலும் மாணவர்க ளின் ஆக்கங்களைக் கொண்டும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடனும் விஞ்ஞான ஆய்வு கூடமானது ஒழுங்க மைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட் டது.

தொடர்ச்சியாக இரு நாள்களுக்கு கண்காட்சி நிகழ்வுகளும் இடம்பெற்றன.



இந்த நிகழ்வில் டாக்டர் எச்.எம். றஸீன் முஹம்மட் பிரதம அதிதியாகவும், கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம், கல்முனை வலய பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாஸா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்ட னர்.



# பாலமுனை அல் அறபா விளையாட்டு கழகத்தின் சீருடை அறிமுக நிகழ்வு!

(எம். எப். றிபஸ்)

பாலமுனை அல் அறபா விளையாட் டுக் கழகத்தின் சீருடை அறிமுக நிகழ்வு கழகத்தின் தலைவர் ஏ. எல்.ஐயூப் தலைமையில் இடம்பெற்றது.

பாலமுனை பிரதேசத்தில் பல வேறுபட்ட சமூக சேவைகளில் ஈடுபட்டு வரும் இந்தக் கழகமானது கடந்த காலங்களில் பல போட்டி நிகழ்வுகளிலும் பங்கு பற்றி முன்னணிக் கழகமாக இந்தப் பிராந்தியத்தில் திகழ்கிறது.

இந்த வருடத்துக்கான சீருடையை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ் வில் பாலமுனை பிரதேச ஷிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரும், தொழில திபருமான ஏ.எல். எம். அலியார் பிரதம அதிதியாக் கலந்து கொண்டார்.

# போதைப் பொருள் கடத்தலில் மூளையாக செயற்பட்ட ஜாபர் சாதிக் ஜெய்பூரில் கைது!





திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது

2000 ஆயிம் கோடி ரூபா மதிப்புள்ள போதைப் பொருள் கடத்தலில் மூளையாகச் செயற்பட்டார் என்று கூறப்படும் ஜாபர் சாதிக் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப் பொருள் தயாரிக்க பயன்படுத்தப்படும் முக்கிய வேதிப் பொருள்கள், தேங்காய் பவுடர் மற்றும் சத்து மா பொதிகளில் மறைத்து வைத்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு கடத்தப்படுகின்றன என்று டில்லியில் உள்ள மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதுதொடர்பாக, டில்லி போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், கடத்தல் கும்பல், மேற்கு புது டில்லி கைலாஷ் பூங்கா பகுதியில் பதுங்கியிருந்தது தெரிய வந்தது.

கடந்த 15 ஆம் திகதி அங்கு சென்ற பொலிஸார் அங்கிருந்த சென்னை முகேஷ், முஜிபுர், விழுப்புரம் அசோக் குமார் ஆகிய 3 பேரை கைது செய்தனர். அவர்களிடம் இருந்து போதைப் பொருட்கள் தயாரிக்க பயன்படும் 50 கிலோ வேதிப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் சர்வதேச மதிப்பு 2,000 கோடி ரூபாவாகும்.

இந்தக் கடத்தலுக்கு மூளையாக செயல்பட்டது தமிழ் சினிமா திரைப்படத் தயாரிப்பாளரும், தி.மு.க. சென்னை மேற்கு மாவட்டஅயலக அணியின் துணை அமைப்பாளருமான ஜாபர் சாதிக் என்று குற்றம்சாட்டப்பட்டது. இதையடுத்து, தி.மு.கவில் இருந்து அவர் நிரந்தமாக நீக்கப்பட்டார்.

இந்த நிலையில், போதைப் பொருள் கடத்தல் வழக்கு தொடர்பாக, தங்கள் அலுவலகத்தில் கடந்த 26 ஆம் திகதி ஆஜராகுமாறு புது டில்லி போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் கடந்த 23 ஆம் திகதி ஜாபர் சாதிக் வீட்டில் அழைப்பாணை ஒட்டினர். ஆனால் அவர் ஆஜராகவில்லை.

இதையடுத்து, அவரையும், அவரது சகாக்களையும் பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டு தேடப்பட்டு வந்தனர். இந்த நிலையில் ஜாபர் சாதிக் கைது செய்யப்பட்டுள்ளார். மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் ஜாபர் சாதிக்கைக் கைது செய்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஜெய்ப்பூரில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கைதை உறுதிப்படுத்தியுள்ள என்சிபி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# போதைப் பொருள் இல்லாத மாநிலமாக தமிழகத்தை மாற்ற வேண்டியது அவசியம்

## அ.தி.மு.க. சார்பில் ஆளுநர் ரவியிடம் வலியுறுத்தினார் எடப்பாடி பழனிசாமி




தமிழகத்தைப் போதைப் பொருள்கள் இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டும். இந்த குற்றத்தில் தொடர்புடையவர்களுக்கு கடுமையான தண்டனைப் பெற்றுத்தர வேண்டும். ஒருதுளி போதைப் பொருள் கூட தமிழகத்தில் விற்பனை ஆகாமல் தடுக்க வேண்டும்.

அதிமுக சார்பில் ஆளுநர் ஆர்.என்.ரவியிடம் வலியுறுத்தியுள்ளார் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான குழுவினர், ஆளுநர் ஆர்.என்.ரவியை சந்தித்தனர். தமிழகத்தில் ஆபத்தான போதைப் பொருள் பழக்கம் மற்றும் போதைப் பொருள் கடத்தல் கும்பலால் நிலவும் அச்சுறுத்தல் வருங்கால தலைமுறைகளுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு விளைவிக்கும் பாதிப்புகள் குறித்து விவரிக்கும் மனு ஒன்றை அளித்தனர். போதைப் பொருள்களைத் தடுக்கவும், அதில் தொடர்புள்ளவர்கள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த எடப்பாடி பழனிசாமி, "தமிழகத்தைப் போதைப் பொருள்கள் இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டும். இந்த குற்றத்தில் தொடர்புடையவர்களுக்கு கடுமையான தண்டனையை பெற்றுத்தர வேண்டும்.

இந்த மோசமான நிலைக்குத் தமிழகம் தள்ளப்பட்டதற்குக் காரணம் திமுக தான். எனவே, இதற்கு தார்மீக பொறுப்பேற்று தமிழக முதல்வர் ஸ்டாலின், அவரது மகன் அமைச்சர் உதயநிதி ஆகியோர் அவர்களது பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

2019ம் ஆண்டில் இதே ஜாபர் சாதிக் மலேசியாவுக்கு போதைப் பொருளகளை கடத்தியதாக செய்திகள் வந்திருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது, போதைப் பொருள்கள் விற்பனை இன்றோ, நேற்றோ தொடங்கப்பட்டது இல்லை. பல ஆண்டுகளாக பல்வேறு வெளிநாடுகளுக்கு இந்த போதைப் பொருள்கள் விற்பனை நடந்துள்ளன. இதில் கிடைத்த வருமானத்தின் மூலம், தமிழக உயர் பொலிஸ் அதிகாரிகள், முதல்வர் குடும்பத்துக்கு நெருக்கமானவர்களின் துணையோடு தமிழகத்திலும், வெளிநாடுகளிலும் ஜாபர் சாதிக் போதைப் பொருள்களை விற்பனை செய்துள்ளது தெள்ளத்தெளிவாக தெரியவருகிறது.

இந்த விவகாரம் குறித்து உரிய முறையில் தகுந்த விசாரணை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் உண்மை வெளியே வரும்" .என்று அவர் கூறினார்.

### முருகன் பாஸ்போர்ட் பெறுவதற்கு நேர்காணல்

# இலங்கை துணை தூதரகத்திடம் முன் அனுமதி பெற திருச்சி ஆளுநருக்கு சென்னை நீதிமன்றம் உத்தரவு

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட முருகன் பாஸ்போர்ட் பெறுவதற்கு, அவருடன் நேர்காணலில் பங்கேற்க இலங்கை துணை தூதரகத்திடம் முன் அனுமதி பெற, திருச்சி மாவட்ட ஆளுநருக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்துள்ள மனுவில், "முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து உச்ச நீதிமன்றம் 7 பேரையும் விடுவித்தது. இந்த நிலையில், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் எனது கணவர் முருகன் தங்கவைக்கப்பட்டுள்ளார். லண்டனில் வசிக்கும் தன் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதால், அனைத்து நாடுகளுக்கும் செல்வதற்கான பாஸ்போர்ட் வழங்க கோரி இருவரும் விண்ணப்பித்திருந்தோம். நேர்காணலுக்காக ஜனவரி 30 ஆம் தேதி அழைக்கப்பட்டோம்.

என்னுடைய நேர்காணல் முடிந்து விட்டது. இந்த நேர்காணலில் கலந்து கொள்ள அனுமதிக்காததால், கணவர் முருகன், இலங்கை துணை தூதரகம் அழைத்தபோது ஆஜராக முடியவில்லை. திருச்சி முகாமில் உள்ள மோசமான சூழல் காரணமாக ஏற்கெனவே ஒரு மாதத்தில் 2 பேர் இறந்



துள்ளனர். எனவே, என்னுடைய கணவருக்கு எதுவும் நடப்பதற்கு முன்பாக, நாங்கள் இருவரும் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புகிறோம். எனவே எனது கணவர் முருகன் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்துக்குச் சென்று நேர்காணலில் கலந்து கொள்வதற்கான அனுமதியை வழங்க மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும். அங்கு சென்று வருவதற்கு பாதுகாப்பு தேவைப்படும் பட்சத்தில், உரிய பாதுகாப்பு வழங்க பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர். சுரேஷ்குமார், குமரேஷ் பாபு ஆகியோர் அடங்கிய அமர்வில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது பொலிஸ் சார்பில் முன்னிலையான குற்றவியல் வழக்கறிஞர் ஆர். முனியப்பராஜ், முருகனை எப்போது வேண்டுமானாலும் இலங்கை தூதரகத்துக்கு பாதுகாப்புடன அழைத்து செல்ல தயாராக இருக்கிறார் என்று தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், எப்போதும் அழைத்து செல்லலாமா? அல்லது முன்கூட்டியே அனுமதி பெற்று அழைத்துச் செல்ல வேண்டுமா என கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த குற்றவியல் வழக்கறிஞர், திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.30 முதல் பிற்பகல் 1.30 மணி வரை எப்போது வேண்டுமானாலும் அழைத்து செல்லலாம் என்று கூறினார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், முருகன் அழைத்துச் செல்லப்படும் நாளில் ஒருவேளை அவரால் நேர்காணலில் பங்கேற்க முடியாத சூழல் ஏற்பட்டால் அது பெரிய சிரமத்தை ஏற்படுத்தும்.

எனவே, நேர்காணலுக்காக முன்கூட்டியே இலங்கை தூதரகத்திடம் அனுமதி பெற வேண்டும் என்று திருச்சி மாவட்ட ஆளுநருக்கு உத்தரவிட்டனர். அனுமதி பெற்ற தகவலை எதிர்வரும் 12 ஆம் திகதி நீதிமன்றத்தில் தெரிவிக்க உத்தரவிட்டு, விசாரணை அன்றைய தினத்துக்கே ஒத்திவைக்கப்பட்டது.

# தி.மு.கவையோ, கூட்டணிக் கட்சியையோ விமர்சிக்கக் கூடாது என்று அறிவுறுத்து!

### வி.சி.கவுக்கு 2 தொகுதிகள் கிடைத்ததை அடுத்து திருமாவளவன் தெரிவிப்பு



மக்களவைத் தேர்தலையொட்டி 3 தொகுதிகள் கேட்ட நிலையில் 2 தொகுதிகள் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டன. இதையொட்டி, திமுகவையோ, கூட்டணி கட்சியையோ விமர்சிக்கக் கூடாது என்று நிர்வாகிகளுக்கு விசிக தலைவர் திருமாவளவன் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் முக நூல் நேரலையில் பேசியதாவது,

திமுகவுடனான கூட்டணியில் 2 தொகுதிக்கு உடன்பட்டிருப்பது விசிகவினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கலாம். கட்சி நலனா, கூட்டணி நலனா, நாட்டு நலனா என்ற கேள்வியின் போது, நாட்டு நலன் முக்கியமானது. அதற்கு கூட்டணி நலன் முன் நிபந்தனையாக இருக்கிறது.

எனவே, கட்சி நலனை அடுத்த நிலைக்குத் தள்ளி வைக்க வேண்டிய கட்டாயம் எழுகிறது. கூட்டணியில் யார் பலமாக இருக்கிறோம் என்ற ஒப்பீட்டில் விசிகவுக்கு உடன்பாடில்லை. அக்கறை உள்ளவர்களைப் போல கருத்துகளைச் சொல்லி நம் உணர்ச்சியைத் தூண்டுவார்கள். அதற்கு ஒருபோதும் இரையாகக் கூடாது.

திமுகவையோ, கூட்டணி கட்சிகளையோ விமர்சிப்பது ஒரு போதும் ஏற்புடையதல்ல. தற்போதைய சூழலில், புதிய மாநில, மாவட்ட நிர்வாகத்தை அறிவிக்க இயலாது. இருக்கும் நிலையில் தேர்தல் பணியில் கவனம் செலுத்த வேண்டும். விழுப்புரம், சிதம்பரம் தொகுதிகளிலாவது முழுமையான மாவட்ட நிர்வாகத்தை அறிவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன்.

வெல்லும் ஜனநாயக மாநாட்டு தீர்மானங்களை விளக்கி மாவட்ட அளவில் பொதுக் கூட்டம் நடத்த வேண்டும். கூட்டம் நடந்த இடங்கள் குறித்த தகவலை தலைமையகத்துக்கு தெரிவிக்க வேண்டும். மாநாட்டை நடத்தாத மாவட்டச் செயலாளர்கள் விசாரணைக்கு ஆளாக நேரிடும். -என்றார்.

# லெபனானில் தரைவழி நடவடிக்கைக்கு தயாராகிவரும் இஸ்ரேலிய இராணுவம்!



லெபனானில் தரைவழி நடவடிக்கைக்கு சாத்தியமான பல திட்டங்களைத் தயாரிக்குமாறு இஸ்ரேலிய இராணுவத் தளபதி ஹெர்சி ஹலேவி, பிரிகேடியர் ஜெனரல் மோஷே சிகோ தாமிருக்கு உத்தரவிட்டுள்ளார்.


வடக்கில் ஒரு பொதுப் போர் வெடிக்கும் சாத்தியம் இருப்பதால், இஸ்ரேலிய இராணுவம் லெபனானில் தரைவழி நடவடிக்கைக்கான முன்னேற்பாட்டை தயாரித்து வருகிறது என்று இஸ்ரேலிய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இராணுவத் தளபதி ஹெர்சி ஹலேவி, பிரிகேடியர் ஜெனரல் சிகோ தாமிர் ஹிஸ்புல்லாவுக்கு, தரை வழி தாக்குதலை தொடங்குவதற்கான திட்டத்தை வகுக்க வேண்டும் என்று உத்தரவிட்டதாக அந்த ஊடகம் மேலும் கூறியுள்ளது.

எல்லையிலிருந்து எட்டு முதல் 10 கிலோ மீற்றர் தொலைவுக்குக் ஹிஸ்புல்லாவை பின்னோக்கி தள்ளுவதை நோக்கமாகக் கொண்ட வரையறுக்கப்பட்ட நுழைவு உட்பட பல்வேறு நோக்கங்களின் பல ஊடுருவல் திட்டங்களை தாமிர் உருவாக்குவார் என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

எனினும், மார்ச் 15 அன்று இஸ்ரேலிய இராணுவம் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக தாக்குதலை மேற்கொள்ளும் என்று கூறப்படும் வதந்திகள் இராணுவத்தால் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த அறிக்கை குறித்து இஸ்ரேல் இராணுவம் அதிகார பூர்வமாக கருத்து தெரிவிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதி அதிகார பூர்வமாகத் தெரிவானார்



பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதியாக, மறைந்த முன்னாள் பிரதமர் பேநசீர் புட்டோவின் கணவரும், முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் பிலாவல் புட்டோ ஜார்தாரியின் தந்தையுமான ஆசிஃப் அலி ஜார்தாரி அதிகார பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அந்த நாட்டு நாடாளுமன்றத்துக்கு கடந்த மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் – நவாஸ் (பி.எம்.எல்.என்) கட்சி ஆட்சியமைக்க பிலாவல் புட்டோ ஜார்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆதரவு அளித்தது.

அதனை தொடர்ந்து, நவாஸ் ஷெரீஃபின் சகோதரர் ஷாபாஸ் ஷெரீஃப் நாட்டின் பிரதமராக 2 ஆவது முறையாக மீண்டும் பொறுப்பேற்றார்.

இதற்கான பேச்சு வார்த்தையின் போது, ஜனாதிபதி தேர்தலில் ஆசிஃப் அலி ஜார்தாரிக்கு ஆதரவு அளிக்க பி.எம். எல்.என் கட்சி ஒப்புக்கொண்டது.

அதையடுத்து, சனிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இரு கட்சிகளின் பொதுவேட்பாளராக போட்டியிட்ட ஜார்தாரி வெற்றிபெற்றார்.

அத்துடன், கடந்த 2008 இல் இருந்து 2013 வரை பாகிஸ்தானின் ஜனாதிபதியாக ஆசிஃப் அலி ஜார்தாரி பொறுப்பு வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மாலைதீவுக்கான இந்தியச் சுற்றுலாவிகள் ஒரே ஆண்டில் சடுதியாகக் குறைந்தனர்!

ஒரே ஆண்டில் மாலைதீவுக்குச் செல்லும் இந்தியச் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான தரவுகளை மாலைதீவு சுற்றுலா துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாலைதீவுக்கு செல்லும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 33 சதவீதம் குறைவடைந்துள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்தியா, மாலைதீவு இடையேயான மோதல் போக்கு தொடரும் நிலையில் இவ்வாறு , சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்று கூறப்படுகிறது. கடந்த ஆண்டு தொடக்கம் முதல் மார்ச் 4ஆம் திகதி வரையில் 41,054 இந்தியச் சுற்றுலாப் பயணிகள் சென்றுள்ளனர்.

ஆனால் இந்தாண்டு, மார்ச் 2ஆம் திகதி வரையில் மாலைதீவு சென்ற சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை 27,224ஆக குறைந்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 13,830 குறைவாகும்.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் மாலைதீவுக்கு சென்ற மொத்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளில் 10 சதவீதத்துடன் இந்தியா இரண்டாவது இடத்தில் இருந்தது.

ஆனால், இந்த முறை அதன் பங்கு 6 வீதத்தால் குறைந்துள்ள நிலையில், இந்தியா ஆறாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு இதேபோல இருந்தால் இந்தியாவில் இருந்து மாலைதீவு செல்லும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை மேலும் குறையும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

# உக்ரைன் ஏவிய 47 ட்ரோன்களை அழித்துள்ளதாம் ரஷ்ய இராணுவம்!



உக்ரைன் ஏவிய 47 ட்ரோன்களை அழித்துள்ளதாக ரஷ்ய இராணுவம் அறிவித்துள்ளது.

இதன்போது, ரஷ்யாவின் வான் பாதுகாப்பு அமைப்பால் 47 உக்ரைன் ட்ரோன்கள் இடைமறித்து அழித்துள்ளது. அதில் ரொஸ்தொவ் பகுதியில் 41 ட்ரோன்கள் வீழ்த்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வொல்கரோடில் 3 ட்ரோன்கள், காஸ்கில் 2 ட்ரோன்கள், பெல்கராட் பகுதியில் ஒரு ட்ரோன் என 6 உக்ரைன் ட்ரோன்கள் இடைமறித்து அழிக்கப்பட்டன என்று ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ரஷ்யாவுடனான போரில் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கு பிரித்தானியா 10,000 இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை வழங்கவுள்ளது என்று ஏற்கனவே உறுதியளித்துள்ளது.

அதன்படி, கிராண்ட் ஷாப்ஸ் அறிவித்த £325 மில்லியன் முதலீட்டு தொகுப்பின் ஒரு பகுதியாக உக்ரைனுக்கு 10,000 இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை வழங்கவிருப்பதாக கூறப்படுகிறது.

## இந்தியாவுடனான உறவைப் புத்துயிர்ப்பிக்க முயற்சி செய்து வருகின்றதாம் அமெரிக்கா!

### ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிப்பு



சீனாவின் நேர்மையற்ற வர்த்தக நடைமுறைகளை அமெரிக்கா எதிர்க்கிறது. இந்தியாவுடனான உறவைப் புத்துயிர்ப்பிக்க முயற்சி செய்கிறோம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனாவின் நேர்மையற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு எதிராகவும், அமைதிக்கு ஆதரவாகவும் தாய்வானில் ஸ்திரத்தன்மை நிலவுவதற்கு ஆதரவாகவும் அமெரிக்கா நிற்கும்.

மேலும், பசுபிக், இந்தியா, அஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா உடனான உறவுகளைப் புத்துயிரப்பித்து வருகிறோம்.

சீனா எழுச்சி பெற்று வருகிறது. அமெரிக்கா வீழ்ச்சி அடைந்து வருகிறது என பலர் கூறுகின்றனர்.

ஆனால், அமெரிக்காதான் எழுச்சி பெற்று வருகிறது. உலகில் சிறப்பான பொருளாதாரத்தை அமெரிக்கா பெற்றுள்ளது.

இதன்படி நான் ஜனாதியதியாக பதவியேற்றதில் இருந்து அமெரிக்கா ஜி.டி.பி. எழுச்சி பெற்று வருகிறது. சீனா உடனான வர்த்தக பற்றாக்குறை குறைந்து வருகிறது.

அமெரிக்காவின் அதிநவீன தொழில்நுட்பத்தை சீனாவால் பயன்படுத்த முடியாது. சீனாவுக்கு எதிரான எனது கடுமையான அணுகு முறையை, இதற்கு முன்னர் ஜனாதியதியாக இருந்தவர் பின்பற்றியது இல்லை.

இதற்கமைய 21 ஆம் நூற்றாண்டில் சீனாவுக்கு எதிரான போட்டியில் அமெரிக்கா வலுவாக உள்ளது.- என்றார்.



## இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை விமர்சிக்கிறார் துருக்கிய ஜனாதிபதி எர்டோகன்!

ஹிட்லர், ஸ்டாலின் மற்றும் முசோலினியுடன் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை ஒப்பிட்டு பேசியுள்ளார் துருக்கிய ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகன்.

நெதன்யாகுவும் அவரது நிர்வாகமும், காசாவில் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்து, ஹிட்லர், முசோலினி மற்றும் ஸ்டாலின் ஆகியோருக்கு அடுத்தபடியாக தங்கள் பெயர்களை எழுதுகிறார்கள் என்று எர்டோகன் இஸ்தான்புல்லில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இடம்பெற்ற உரையில் துருக்கிய ஜனாதிபதி கூறினார்.

காசாவில் நடந்த போரின் தொடக்கத்தில் இருந்தே எர்டோகன் இஸ்ரேலை கடுமையாக விமர்சிப்பவர்களில் ஒருவராக இருந்து வருகிறார்.

ஹமாஸ் மற்றும் அதன் தலைவர்களை துருக்கி உறுதியாக ஆதரிக்கும் எர்டோகன் முன்னர் இஸ்ரேலை "பயங்கரவாத நாடு" என்று அழைத்தார் மற்றும் காஸாவில் "இனப்படுகொலை" நடத்தியதாக குற்றம் சாட்டினார்.

முன்னதாக தனது உரையில், ஹமாஸை பயங்கரவாத குழுவாக அங்கீகரிக்க மறுத்த அவர், ஹமாஸ் மற்றும் அதன் தலைவர்களை துருக்கி உறுதியாக ஆதரிக்கும் என்றார்.

பக்கங்கள் - 6

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 10/03/2024

## கனடாவின் பல மாநிலங்கள் ஒரு மணி நேரத்தை இழந்தன

ஒன்ராரியோ, மார்ச்10

கனடாவின் பெரும்பாலான மாநிலங்கள் ஒரு மணித்தியாலத்தை இழந்தன.

வருடாந்த நேர சேமிப்பு C2



# கொலையுண்ட 6 இலங்கையரையும்

# நினைவு கூர்ந்த பார்ஹெவன மக்கள்



ஒன்ராரியோ,மார்ச்10

ஒட்டாவாவின் பார்ஹெவன் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையர்களுக்கு அப்பகுதி மக்களால் நினைவு கூரல் நிகழ்வு ஒன்று நேற்று (மார்ச் 9) ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மாத்திரமன்றி, வேறு பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கானோர் அணி திரண்டு வந்து மறைந்த அறுவரையும் நினைவு கூர்ந்தனர்.

ஒட்டாவா மேயர், ஒன்ராரியோ மாநில உறுப்பினர்கள், பொலிஸார் மற்றும் கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஒட்டாவாவின் ஹெரோன் பகுதியில் அமைந்துள்ள ஜேதவனாராமய விகாரையின் பௌத்த பிக்கு தலைமையில் மத பிரார்த்தனையும் இடம்பெற்றது. C2





# இயற்கை கழிவுகளின் மீள்சுழற்சிக்கு தயாராகிறது எட்மன்டன் நகர சபை!

அல்பேர்ட்டா,மார்ச்10

எட்மன்டன் நகரில் அதிகரித்துச் செல்லும் இயற்கை கழிவுகளை மீள்சுழற்சி செய்வது தொடர்பில் எட்மன்டன் நகர சபை கவனம் செலுத்தி வருகின்றது.

2027ஆம் ஆண்டிற்குள் எட்மன்டன் நகர சபையானது 120,000 தொன் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உள்ளாக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிலத்தில் கலக்கும் கழிவுகளின் அளவைக் கட்டுப்படுத்தும் 25 வருட கால நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்த திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

கழிவுகளை சேமிப்பதற்கு மேலதிக இடவசதி தேவையாக விருப்பதாக எட்மன்டன் நகர சபை வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவின் பல...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறையின் அடிப்படையில் ஒன்ராரியோ உட்பட பல மாநிலங்களில் அதிகாலை இரண்டு மணியுடன் ஒரு மணிநேரத்தை குறைத்தன.

யுகொன் மற்றும் சசகெச்சுவான் மாநிலங்களைத் தவிர கனடாவின் அனைத்து மாநிலங்களிலும் இந்த மாற்றம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

1908ஆம் ஆண்டில் முதன் முறையாக இந்த நேரத்தை சேமிக்கும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் குளிர்கால ஆரம்பத்தில் நாள் ஒன்றில் ஒரு மணித்தியாலத்தை அதிகரித்து நாள் நேரத்தை சேமிப்பதுடன், குளிர்காலம் நிறைவடைந்து, வசந்த கால ஆரம்பத்தில் நாள் ஒன்றில் ஒரு மணி நேரத்தை குறைத்து நாள்பொழுதின் நேரத்தை சேமிக்கின்றனர்.

இந்த நேரமாற்றத்தை இல்லாது செய்வதற்கான முயற்சிகள் நாடாளுமன்ற ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், குறித்த அமைச்சரவைப் பத்திரம் நிறைவேற்றப்படாமையால், ஒவ்வொரு வருடத்திலும் இவ்வாறு இரு முறை நேரம் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது.



## கொலையுண்ட...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வின் போது பாதிக்கப்பட்ட குடும்பத்தின் சார்பில், ஜேதவனாராமய விகாரையின் சமுதாயப் பிரதிநிதியான நாரத கொடித்துவக்கு, சமுதாய மக்களுக்கு தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

கனேடிய மக்கள், பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கெரி ஆனந்தசங்கரி மற்றும் சந்திரா ஆர்யா, ஒட்டாவா தமிழ் ஒன்றியம் ஆகியவற்றுக்கு கொடித்துவக்கு நன்றி தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் விரைவில் கனடாவிற்கு வருகை தரவுள்ளனர் எனவும், அமரக்கோனின் உடல் பிரேத பரிசோதனை மற்றும் இறுதி அறிக்கையின் பின்னர் இலங்கை அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் இலங்கை உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

GUNAAM'S SUPER MARKET

குணம்ஸ் சுப்பர்மார்க்கெட் GSM GUNAAM SUPERMARKET

## Super Deal of this Week

CLICK HERE VIDEO

till March 10th




LOWEST PRICE
3 for 10 $
Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE
10 Kg 19.99$
Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE
3L for 8.99$
Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE
LB 7.99$
Only at GUNAAM'S SUPER MARKET

ஊர் ஆட்டிறைச்சி



LOWEST PRICE
LB 6.99$
Only at GUNAAM'S SUPER MARKET

Ceylon விளைமீன்

## Gunaam's super market இந்த வாரம் அள்ளித் தரும்

மாபெரும் மலிவு விற்பனை பலசரக்குப் பொருட்கள் தாயகத்துப் பழவகைகள், மீன், இறைச்சி, மரக்கறி fresh ஆகவும் மிக மிக குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| Joy Papadam 5 for | - $ 5.00 | Dheepam Oil | - $ 7.99 |
| Kottu mee Noodles 6 for | - $ 5.00 | கத்தரிக்காய் | - $ 1.49 lb |
| Mr.Groudas coconut milk powder 3 for | -$10.00 | Dramstick | - $ 4.99 lb |
| Mr.Groudas Tin milk 3 for | - $10.00 | 1016 Bombay Onion | - 12.99 |
| Blue sea Tin Fish 3 for | - $5.00 | Thai Eggplant | -1.99 lb |
| 200g Gsp 5 for | - $ 5.00 | Indian Eggplant | - $ 1.99 lb |
| Ceycan குத்தரிசி | - $8.99 | Thai Chilli | - $ 2.99 lb |
| Woodiya Tin fish 3 for | - $ 10.00 | Small Onion | - 5.99 lb |
| Maharaya Curry Powder | - $ 11.99 | யாழ்ப்பாணத்து Rasavalli | - 5.99 lb |
| 3L sunflower Oil | - 8.99 | கருணைக்கிழங்கு | - 3.99 lb |
| Mr.Goudas Sea Sah | - $ 1.49 | Roma Tomato | - $1.99 lb |
| Mr.Goudas Table sah | - $ 1.00 | Beet Roots | - $ 00.99 lb |
| 10kg Mr.Goudas Ponni Boiled Rice | - $ 19.99 | அப்பச் சட்டி | - $ 19.99 |
| 10kg Mr.Goudas Palakkedan matta Rice | - $ 19.99 | இருந்து திருவும் திருவளை | - $ 20.00 |
| Grace Basmati Rice | - $ 9.99 | புட்டுப்பானை, மூடி | - $ 20.00 |
| Aroy - D coconut Milk Tin 4 for | - $ 10.00 | இட்லி சட்டி | - $ 20.00 |
| Ashoka mongo Palp | - $ 2.99 | | |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998




# வெடுக்குநாறி கோவில் தாக்குதலுக்கு

# கனடியத் தமிழர் பேரவை கண்டனம்!

**இலங்கையில் உள்ள வெடுக்குநாறி ஆதிசிவன் கோவிலில் இலங்கைப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையைக் கனடியத் தமிழர் பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளது.**

**இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-**

**இலங்கையின் வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள புராதனமான புனித ஆதிசிவன் ஆலயத்தில் இராணுவம், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் கனடியத் தமிழர் பேரவை மிகவும் கவலையடைந்துள்ளது.**

**செப்ரெம்பர் 16, 2020 அன்று வவுனியா நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், பக்தர்கள் தங்கள் வழிபாட்டைத் தொடரவும் கோவிலில் திருவிழாக்களை நடத்தவும் வெளிப்படையாக அனுமதித்த போதிலும், வழிபாட்டாளர்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்துவதைத் தடுக்க சட்ட அமுலாக்க, இராணுவ அதிகாரிகள் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.**

2024 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி, மகா சிவராத்திரியின் போது பாதுகாப்புப் படையினர் மோசமான முறையில் வெடுக்குநாறி மலைப் பகுதியைச் சுற்றி வளைத்து, மனித விழுமியங்களையும் சட்டத்தின் ஆட்சியையும் அப்பட்டமாகப் புறக்கணிக்கும் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

படையினர் சிவ பக்தர்களுக்கான பிரசாதம் மற்றும் பூசைப் பொருள்களை மிதித்து நாசப்படுத்தி, தண்ணீர் பாத்திரங்களைக் கவிழ்த்து, கைத்தொலைபேசிகளைப் பறிமுதல் செய்து, ஜெனரேட்டர்கள் மற்றும் மண்ணெண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தப் பக்தர்களுக்குத் தடை விதித்து நாச வேலைகளில் ஈடுபட்டனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த வெறியாட்டத்தால் கோயிலுக்கு வந்திருந்த குழந்தைகள் தண்ணீரின்றித் தவித்தமை மிகவும் வேதனையான விடயமாகும். இது அங்கு நிகழ்ந்த மனித அவலத்தின் உச்சத்தை எடுத்தியம்புகின்றது.

பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் இந்த மோசமான செயற்பாடுகளைக் கனடியத் தமிழர் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது. நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதும் நிலைநிறுத்துவதும் அவர்களது கடமையே தவிர, அதை மீறிச் செயல்படுவது அல்ல. வெடுக்குநாறி மலையில் சிவ பக்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கேவல நடவடிக்கைகள் அவர்களின் மனித உரிமைகளை மீறுவது மட்டுமல்ல, ஜனநாயகத்தின் உயர் விழுமியங்களில் ஒன்றான வழிபாட்டுச் சுதந்திரத்தையும் அவமதிப்பதாகும்.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தை உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு பக்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், நீதிமன்ற ஆணைக்கிணங்க சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவும் வேண்டுகின்றோம். மேலும் ஆலயத்திற்கும் பக்தர்களுக்கும் பாதிப்பு ஏற்படாமல் இருக்க அரசு விரைந்து செயற்பட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வெடுக்குநாறி ஆதிசிவன் கோவிலில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராகச் சர்வதேச அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், சிவில் சமூகங்கள், மத அமைப்புகள் மற்றும் பன்னாட்டு சமூகங்கள் ஒன்றிணைந்து குரல் எழுப்ப வேண்டும் என்றும் கனடியத் தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது. பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய நாம் அனைவரும் ஒன்றுபடுவது வரலாற்றுக் கட்டாயமாகும்.

நீதி, சட்டத்தின் ஆட்சி மற்றும் அனைத்துக் குடிமக்களுக்குமான அடிப்படை மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், நிலைமைகளைச் சீர்செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா அரசாங்கத்திடம் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஏற்கனவே பல தசாப்தங்களாக அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு, மேலதிகமாக இடம்பெறும் வெறுப்புச் செயல்களைச் சகித்துக் கொள்வதென்பது ஏற்றுக்கொள்ள முடியாதது மாத்திரமன்றி நல்லிணக்கத்தை நோக்கிய எந்தவொரு முற்போக்கான கருத்துகளுக்கும், செயற்பாடுகளுக்கும் ஊறு விளைவிக்கும் நேரடி அவமதிப்புமாகும். இத்தகைய செயல்கள் கடந்த காலக் காயங்களை ஆழக் கிளறுவதோடு மட்டுமல்லாமல், தீர்வு மற்றும் ஒற்றுமையை நோக்கி நகர விரும்பாத சமூகக் குழப்பத்தையும் உருவாக்கும். ஒரு சமூகம் தொடர்ந்து அடக்குமுறைகளை எதிர்கொள்வதும், பின்னர் நல்லிணக்கத்தை நோக்கி பயணிக்க எதிர்பார்ப்பதும் நடைமுறைக்கு முரணானது மட்டுமல்ல, அடிப்படையில் மிக மோசமான அநீதியுமாகும். சுழன்றடிக்கும் இந்த வெறுப்பு வாதமானது எந்தத் தீர்வையும் அளிக்காது.

கனடியத் தமிழர் பேரவை, அமைதியையும் நீதியான தீர்வையும் நோக்கிய அனைத்து முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதுடன், சர்வதேச அளவில் ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளையும் கௌரவத்தையும் நிலைநாட்டுவதற்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. - என்று உள்ளது.



# காஸா மீதான தாக்குதல்களைக் கண்டித்து கடுங் காற்று, மழைக்கு மத்தியிலும் பேரணி

ஒன்ராரியோ, மார்ச் 10

காஸாவில் வன்முறையை முடிவுக்கு கொண்டுவருமாறு கோரி ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று (மார்ச் 9) நாடாளுமன்றத்திற்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடும் மழை மற்றும் காற்றின் மத்தியிலும் வெலிங்டன் வீதி வரை நடந்து சென்ற போராட்டக்காரர்கள், காசாவில் இனப்படுகொலையை நிறுத்துமாறு கோஷமிட்டனர்.

பலஸ்தீனக் கொடியை ஏந்திய போராட்டக்காரர்கள், இஸ்ரேலுக்கான ஆயுதங்களை தடை செய்ய வேண்டும் எனவும், இஸ்ரேல் மீது அரசியல் தடைகள் விதிக்கப்படல் வேண்டும் எனவும், உடனடியாக ஐ.நா. நிவாரண குழுவிற்கு நிதி வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

ஐ.நா. நிவாரண குழுவிற்கான நிதி அளிப்பதனை மீள ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் வெள்ளிக்கிழமையன்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.










# சசகெச்சுவானின் வடக்கில் ஹொக்கி அரங்கம் தீக்கிரை

சசகெச்சுவான்,மார்ச்10

சசகெச்சுவானின் வட பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் ஹொக்கி விளையாட்டரங்கம் முற்றாக தீக்கிரை யாகியுள்ளது.

இந்தப் பகுதியில் இருந்த ஒரே ஹொக்கி விளையாட்டரங்கத்தை அடைவதற்கு 222 கிலோமீற்றர் கிரவல் பாதையிலேயே செல்ல வேண்டும்.

எனவே, தீ விபத்து குறித்து தகவல் கிடைத்தவுடன் தீயணைக்கும் இயந் திரங்களால் விபத்து நடந்த இடத்தை அடைய முடியவில்லை எனத் தெரி விக்கப்படுகின்றது.

# மதுபானங்களுக்கான தீர்வை வரி அடுத்த 2 வருடங்களுக்கு 2 வீதமே!



ஒன்ராரியோ, மார்ச்10

மதுபானங்களுக்கான தீர்வை வரியை 2 சதவீத மாகவே அடுத்த இரண்டு வருடங்களுக்கு வைத்திருப் பதற்கு கனேடிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள கனேடிய அரசாங் கத்தின் வரவு – செலவுத் திட்டத்தின் போது தீர்வை வரி 4.7 சதவீதமாக அதிகரிக்கப்படும் என எதிர்வுகூறப் பட்டிருந்தது.

எனினும், அடுத்த இரண்டு வருடங்களுக்கு இந்த தீர்வை வரி 2 சதவீதமாகவே இருக்கும் என நிதியமைச் சர் கிறிஸ்டியா பிரிலேண்ட் நேற்று (மார்ச்9) தெரிவித் தார்.

இந்த தீர்மானத்தினை கனடாவில் உள்ள உணவு விடுதிகள் வரவேற்றுள்ளன.



# டவுண்டவுன் பகுதியில் கத்திக் குத்துச் சம்பவம்

ஒன்ராரியோ,மார்ச்10

டொரன்டோவின் டவுண்டவுன் பகுதியில் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் 20 வய துள்ள இளைஞர் ஒருவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று சனிக்கிழமை மாலை 4.42 அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து அடி பத்து அங்குல உயரமான, மாநிற சுருள் முடியுடைய, கறுத்த ஜக்கட் அணிந்திருந்த முப்பது வய துடைய சந்தேகநபரை பொலிஸார் தேடி வருகின்ற னர்.